# விவேகானந்த வித்யாலய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கொடைக்கானல்

## அரையாண்டுத் தேர்வு- முக்கிய வினா விடைகள்

பெயர்: வகுப்பு: 11

### குறுவினா விடைகள் (2*2=4)

1. பேச்சுமொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது ஏன்?

- எழுதுவதை மட்டும் தான் கை செய்கிறது.
- ஆனால் வாய் உணர்ச்சி வெளிப்பாட்டை தெரிவிக்கிறது.

2. தமிழ்நாட்டின் மாநில மரம் - குறிப்பு வரைக?

- தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்.
- ஏழைகளின் கற்பக விருட்சம்.
- சிறந்த காற்றுத் தடுப்பான்.

3. கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டது?

- தமிழ் - கோட்டை மலையாளம் - கோட்ட
- கன்னடம் - கோட்டே தெலுங்கு – கோட்ட

4. உ.வே.சா பயின்ற கல்வி முறை – குறிப்பு வரைக?

- தனிநிலையில் புலவரிடம் கற்கும் உயர்நிலை கல்வி முறையில் பாடம் பயின்றார்.

5. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றை கூறுகிறார்?

- நாட்டுப்புறத்தில் எல்லாவற்றையும் விட இயற்கையே சிறந்தாக விளங்குகிறது.
- பட்டணத்தில் மனித இனம் முக்கியமானதாக உள்ளது.

### குறுவினா விடைகள் (3*2=6)

1. பாயிரம் பற்றி நீங்கள் அறிவது யாது?

ஆசிரியர் சிறப்பையும் நூலின் கருத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைப்பது பாயிரம்.

2. இனம் மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையை விவரி?

- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை.
- வேரில்லாத மரம், கூடில்லாத பறவை.

3. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிகோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

தென்கரை நாட்டில் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தாங்கிச் செல்லும்.

4. காவடிச்சிந்து என்பது யாது?

- பண்டைய காலம் முதல் வழக்கத்தில் உள்ள இசை மரபு ஆகும்.
- முருகக் கடவுளுக்கு காவடி எடுத்துச் செல்லும் போது பாடப்படும்.

5. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

- எட்டுத்தொகை நூலில் ஒன்று.
- இதன் ஆசிரியர் பூரிக்கோ ஆவார்.
- 401 பாடல்களை உடையது.

6. தமிழர்கள் புகழ் பலி என்று எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?

- புகழ் வரும் என்றால் உயிரையும் கொடுப்பார்.
- பழி வரும் என்றால் உலகத்தை கொடுத்தாலும் ஏற்க மாட்டார்.

7. மருந்து எது? மரமாக இருப்பது எது?

- மரமாக இருப்பவர் பிறர்க்கு உதவி செய்பவர்
- மருந்து அவரிடம் உள்ள செல்வம்.

8. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றை உறுதிப்படுத்துக?

- மாளிகைகள் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருக்கும்.
- மேரு மலை போன்று உயாந்தது.

9. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

- நாகரம்
- வேசரம்
- திராவிடம்

10. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள் - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

- நாங்கூழ் புழுவின் ஒழுக்கத்தையும் பொறுமையையும் உழைப்பையும் குறிக்கிறது.

### சிறுவினா விடைகள் (2*3=6)

1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

- வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே.
- முன்னோர் எந்த பூச்சிக்கொல்லியையும் பயன்படுத்தவில்லை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

- பூச்சிக்கொல்லியின் பயனால் புற்றுநோய், வாய்ப்புண் போன்ற நோய்கள் வருகின்றன.
- வேப்பங்கொட்டை நொச்சி இலை, பிரண்டை ஆகியவை பயன்படுத்தினால் பூச்சிக் கொல்லிகள் குறையும்.
- மண்புழு போன்றவை அழியாமல் இருக்கும்.

**2. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துகாட்டுடன் விவரி?**

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.
- மலைநில மனிதர்கள் என்றும் அழைப்பார்கள்.
- “சேயோன் மேய மை வரை உலகம்” என்று தொல்காப்பியம் கூறுகிறது.
- கடையெழு வள்ளல்களும் மலைப்பகுதிகளின் தலைவராக இருந்தவர்கள்.

**3. சமணப்பள்ளிக்கும், பெண்கல்வியும் - குறிப்பு?**

**சமணப்பள்ளி:**

- கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கும் சமண மதத்தின் அறங்கள்.
- சமணர்கள் மலையில் தங்கினார்.
- அவர்கள் தங்கிய இடத்திலேயே கல்வியை போதித்தனர்.
- பள்ளி என்றால் படுக்கை என்று பொருள்.

**பெண்கல்வி:**

- வந்தவாசி, வேடல் ஊரில் இருந்த சமண பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்ப்பித்தார்.
- பட்டினகுரத்தி என்னும் ஆசிரியர் விளாப்பக்கத்தில் பள்ளியை நிறுவினார்.

**4. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைக் பாடப்பகுதி வாயிலாக எ.காட்டுக.'.**

- 25-ஆண்டுகால வரலாற்றை வெளிப்படுத்துவன.
- புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள்.
- தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை.
- இராபர்ட் கிளைவ் படையெடுப்பு

**5. பிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் கூறுவன யாவை?**

**பிரெஸ்கோ ஓவியங்கள்:**

- பிரெஸ்கோ என்ற இத்தாலிய சொல்லிற்கு புதுமை என்று பொருள்.
- சுண்ணாம்பு காரை மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படுபவை.

**கற்றளிக் கோவில்கள்:**

- கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கட்டுவது.
- 7-ம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மானால் உருவாக்கப்பட்டது.
- முழுவதும் கற்களால் கட்டப்பட்டது தஞ்சை கோவில்.

**6. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரசாமி கூறுவன யாவை?**

- பேச்சுக்கலை அவர் பெற்ற வரம்.
- அவரின் பாணி இரவல் பாணி அல்ல. கற்று அறிந்ததும் அல்ல.
- நாட்டு மக்களின் தரம், அறிவு, பழக்க வழக்கங்களை நன்றாக தெரிந்து கொண்ட மனிதர்.

**7. வாய்க்காலின் சிறப்புகளாக குறிப்பிடுவன யாவை?**

- வயலுக்கு வாழ்வு அளிப்பது
- கற்களை சிறு சிறு மணல் துகள்களாக மாற்றுவது வாய்க்கால்.
- மழைபொழிவின் நீரை முறையாக வயலுக்கு கொண்டுவருவது.
- பெரிய சிகரம் முதல் குன்றில் விழும் வரை குதித்து எழுந்து ஓடிவருகிறது.

**8. தாமஸிகம் என்றால் என்ன?**

- பூஜைக்கு தேவையான மலர்களை தவிர வேறு எந்த பூக்களும் நமக்கு தேவையில்லை.
- நாகரிக வழக்கத்தில் சீக்கிரம் வாடிடும் மலர்களுடன் தொடர்புண்டு.
- தோட்டக்காரன் கையில் அவற்றை பராமரிக்கும் பொருப்பு இருக்கும்.

## சிறுவினா விடைகள் (2*3=6)

**1. சலச வாவியில் செங்கயல் பாயும் - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.**

**இடம்:** திருமலை முருகன் பள்ளு என்னும் நூலில் வடகரை நாட்டின் இயற்கை வளத்தைப் பற்றி கூறுவது.

**பொருள்:** தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம்:** மலரில் மொய்க்கும் வண்டுகள் ரீங்காரமிட்டுப் பாடுவதை கேட்டு

- மீனை பிடிக்க வந்த உள்ளான் பறவை வண்டின் இசையில் மயங்கி அமர்ந்திருக்கும்
- இதனால் மீன்கள் பயமின்றி விளையாடும்.

**2. ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணத்தின் கொல்- இடஞ்சுட்டி பொருள் விளக்குக?**

**இடம்:** நற்றிணையில் போதனார் பாடிய பாலைத்திணையில் இடம் பெற்று உள்ளது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

தலைவியை காண சென்ற செவிலி நற்றாயிடம் கூறுவது "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணத்தின் கொல்".

**பொருள்:** விளையாட்டு பெண் இல்லறம் ஆற்றும் நல்லறிவை எங்கிருந்து கற்றாள் என்று நற்றாய் செவிலியிடம் வியந்து கூறல்.

**விளக்கம்:** விளையாட்டுப்பெண் பருவமடைந்து தன் துணையைத் தேடி இல்வாழ்க்கையை நன்றாக நடத்தும் அறிவும் ஒழுக்கமும் எங்கு கற்றாள் என்று நற்றாய் செவிலியிடம் கூறினாள்.

**3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

**மருந்து:** உண்டதும், செரித்தலும் அறிந்து உண்டால் மருந்து ஒன்று தேவையில்லை.

**மருத்துவர்:** நோயையும் அதன் காரணத்தை நீக்கும் வழியையும் அறிந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**மருத்துவம்:** நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என மருத்துவம் செயல்பட வேண்டும்.

**4. சிங்கி பெற்ற பரிசு பொருட்களாகக் குற்றால குறவஞ்சி கூறுவன யாவை?**

- சிலம்பு தண்டை
- பாடகம் அணிமணிக்கெச்சம்

**5. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துக்களாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

- சாழல் என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டு
- ஒருத்தி வினா கேட்கவும் மற்றொருத்தி விடை கூறுவது.
- இறைவன் செயலையும் அதன் உண்மைகளை விளக்குவது திருச்சாழல்.
- இறைவனை குறித்து ஒருபெண் கேள்வி கேட்பது, இன்னொருத்தி இறைவனின் செயலை நியாயப்படுத்தி பாடிக்கொண்டே விளையாடும் நிகழ்வு.

**6. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்- இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?**

**இடம்:** பாரதிதாசன் எழுதிய புரட்சிக்கவி காவியத்தல் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:** குற்றம் இல்லாத தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று உதாரன் மக்களிடம் வேண்டுகிறான்.

**விளக்கம்:** மன்னன் மகள் கவிதை சொல்லி தர வந்த உதாரனைக் காதலிக்கிறாள். இதனால் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்படுகிறது.

இதற்கு தமிழ்தான் காரணம் என்று சமுதாயம் எண்ணி விடுமோ என்று கருதிய உதாரன் குற்றம் இல்லாத தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகிறான்.

## சிறுவினா விடைகள் (2*3=6)

**1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?**

- மொழிக்கு முதலில் வரும் எழுத்து 22.
- உயிர் எழுத்துக்கள் 12 (அ முதல் ஔ வரை)
- மெய்யெழுத்துக்கள்- 1 (க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ)

**2. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை? எ.காட்டு தருக?**

- மொழிக்கு இறுதியில் வரும் எழுத்து 24.
- உயிர் எழுத்துக்கள் 12 (அ முதல் ஔ வரை)
- மெய்யெழுத்துக்கள்- 1 (ஞ், ண், ந், ம், ர், ல், வ், ழ்)
- குற்றியலுகரம் -1
- **எ.கா:** தமிழ் + அரசி = தமிழரசி

  நாடு + பண் = நாட்டுப்பண்

**3. உயிரீறு, மெய்யீறு - விளக்குக**

- **உயிரீறு:** நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்து அதன் இறுதியில் நிற்பது.

**சான்று:** மணி + மாலை = மணிமாலை

- **மெய்யீறு:**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருப்பது.

**சான்று:** பொன்+ வண்டு = பொன்வண்டு

**4. உயிர் முதல், மெய் முதல் - எ.காட்டுடன் விளக்குக**

- **உயிர் முதல்:**

  வருமொழியின் முதல் எழுத்து உயிராக இருந்தால்.

**சான்று:** வாழை + இலை = வாழையிலை

- **மெய் முதல்:**

வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம்.

**சான்று:** தமிழ்+ நிலம் = தமிழ்நிலம்

**5. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

**சீர்:** இயற்சீர் (ஆசிரிய உரிச்சீர்)

**தளை:** நேரொன்றாசிரியத் தளை

நிரையொன்றாசிரியத் தளை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**மொழித்திறன் பயிற்சி: ப.எண்:** 23, 24, 54, 79, 115, 143, 175.

**1. அணி இலக்கணம்:** (உருவக அணி, பிறிது மொழிதல் அணி, உவமை அணி, சொல் பொருள் பின்வருநிலை அணி)

2. **திணை துறை:** ( முல்லை, குறிஞ்சி),

3. **சான்றோர் சித்திரம்** (ப.எண்: 199)

4. **தமிழாக்கம்:** 25, 53, 79, 223

5. நயம் பாரட்டல்:

**மையக்கருத்து:** பாடலின் கருத்தை எழுது.

**மோனை:** முதல் எழுத்து ஒன்றி வருது மோனை.
எ.கா: முச்சங்கம் - முதுபுலர்

**எதுகை:** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
எ.கா: முச்சங்கம் - அச்சங்கம்

**இயைபு:** கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
எ.கா: தமைக்கூட்டி – பொருள்கூட்டி

**சந்தம்:** இப்பாடலை ஆசிரியர் சந்த நயத்துடன் இயற்றியுள்ளார்.

**அணி:** இப்பாடல் அணிநயத்துடன் இயற்றப்பட்டுள்ளது.

## <u>நெடுவினா(3*6=18)</u>

1. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க.
2. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
3. அடக்கமுடமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.
4. தலைவியின் இல்லறப் பாங்கினை பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?
5. பௌத்த கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி, முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்ப்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
6. கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சை பெரிய கோவிலுக்கு பொருந்துவதை விளக்கி எழுதுக?
7. சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை – என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்கைக்கு எங்ஙனம் பொருத்தும் என்பதை விளக்குக.
8. சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.
9. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
10. பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுப்படுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.
11. சிம்பொனி தமிழர் ஆஸ்கார் தமிழர் குறிப்பு வரைக.

*************

**PREPARED BY**
**Mr. P. VAHEESWARAN** M.COM.,M.PHIL.,DCA.,BE.D
**VICE-PRINCIPAL**
**PG ASST IN COMMERE & ACCOUNTNACY**
**VVIEKANANDA VIDYALAYA**
**MATRIC HR SEC SCHOOL,**
**PANNAIKADU PIRIVU**
**KODAIKANAL**
**DINDIGUL DISTRICT**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com